முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் போகமகாரிஷி அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

14.10.2018, ஞாயிற்றுக்கிழமை

1. **கலியுகத்தார் கர்மா மூலம்**
**கண்டு வரும் கட்டம் போக்கி**
**பழிபாவம் சேரா மீட்டுமே**
**பண்பாளர்களாய் உருவாக்கவே**
2. ஆக்கம் தந்து காத்தருள
அவதாரம் புரிந்த அரங்கனே
தேக்கமிலா உன் வழி வருவோர்
தேறுவர் என்று கூறியே
3. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி தரிவை திங்கள்**
தெரியவே **எழுநான்கு திகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 28ம் நாள் 14.10.2018, ஞாயிற்றுக்கிழமை)**
**தேசிகனுக்கு போகமகாரிஷி யானும்**
4. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்குரு ஞானபண்டிதனின்
ஞான சக்தியாக வந்த ஞானியே
ஞான தேசிகனே உலக ஞானிகளின்
5. ஞானிகளின் சூட்சும சக்தியாகும்
ஞான பூசையாக அரங்கன்
ஞானிகளை வேண்டி செய்யும்
நாட்டிடுவேன் முழுமதி பூசையே
6. பூசையே உலகை மாற்றுகின்ற
புண்ணியமிக்க பூசை ஆகும்
ஆசைபட உலக ஞானிகளே
அரங்கன் அறம் மெச்சி வந்து
7. வந்துமே அமுதில் சக்தி கூட்டி
வரம் தந்து அருள் செய்விக்க
சிந்தை வைத்து கலியுகத்தார்
செப்பிடுவேன் அரங்கனை நோக்கி
8. நோக்கியே வருகை புரிந்து
நிலமதனில் அருளாசி பெற
ஊக்கமும் உயர் தன்மையும்
உண்மை விளக்கமும் தெளிந்து
9. தெளிந்து கலி இடரை வென்று
தேசிகன் காட்டும் வழியை
வழி மொழிந்து வரும் தலைமுறைகளும்
வணங்கிட வகை செய்து சிறப்பர்
10. சிறப்பு தரும் சிறந்த யோகியே
சேவல் கொடியோனின் தவசியே
மறுக்கவிலா மாதருமம் செய்ய
மரணத்தையும் வெல்லலாம் எனும்

11. எனும் அறம் வழி அற்புதம் நிகழ்த்திய
ஈடு இணையில்லா ஞான குருவே
ஞானயுகம் உன்னால் மலரும் என
நாட்டியே விளம்பிய ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் போகமகாரிஷி அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

மாயை சூழ்ந்த கலியுகத்தினில் வாழும் மக்கள், அவர்கள் பல ஜென்மங்களில் செய்த பாவங்களினால் இந்த ஜென்மத்தில் அனுபவித்து வருகின்ற கர்மவினைகளால் உண்டாகும் துன்பங்களிலிருந்து, அவர்களது துன்பங்களையும், இடையூறுகளையும் போக்கி, மீண்டும் அவர்களுக்கு பாவமும் பழியும் சேராதவாறு மீட்டு காத்து, அவர்களை பண்பாளர்களாக உருவாக்கிடவே எல்லாவிதமான ஆக்கமும் ஊக்கமும் தந்து, அவர்களை காத்திடவே, இவ்வுலகினில் முருகப்பெருமானின் அற்புத சக்திகளையெல்லாம் பெற்று, முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட, ஆறுமுக அரங்கமகா தேசிகனே, தாம் கூறும் தூயநெறியான உண்மை ஆன்மீக மார்க்கத்தினை ஏற்று உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவநெறியில் வந்திட்டால் கடைத்தேறுவார்கள் எனக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 28ம் நாள் 14.10.2018, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே போகமகாரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் போகமகாரிஷி.

உலகம் நலம்பெறவே அறியாமையில் மூழ்கியுள்ள மக்களுக்கு உபதேசித்து ஞானவழி செலுத்திட உயர்ஞான குருவாய், ஞானபண்டிதன் முருகப்பெருமான், முருகப்பெருமானின் ஞானசக்தியாக வந்து உதித்திட்ட ஞானதேசிகன், ஆறுமுக அரங்கமகா தேசிகனே இவ்வுலகினில் உள்ள ஞானிகளின் ஒட்டுமொத்த சூட்சும சக்தியாகும்.

ஞானபூசையாக ஆறுமுக அரங்கனும் ஞானிகள் திருவடி பற்றி, ஞானிகளை வேண்டி செய்கின்ற ஞானபூசையாம் பௌர்ணமிதோறும் செய்கின்ற ஞானபூசைகளே இவ்வுலகை மாற்றுகின்ற புண்ணியம்மிக்க பூசையாகும்.

ஆறுமுக அரங்கன் பொதுநலமாய் உலக நலன் கருதி செய்கின்ற அறப்பணிகளைக் கண்டு உலக ஞானிகள் எல்லாம் வியந்துமே வாஞ்சையோடும் ஆசையோடும் அரங்கன் அமர்ந்த ஞானவீடாம் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை நாடி வந்து ஆங்கே சமைக்கப்படும் உணவில் சக்தி கூட்டி, உணவை உண்போர் நலம்பல பெற்றிட வரமும் தந்து, உணவினை உண்பவர்களுக்கு அருளும் செய்து காத்து நிற்கின்றனர்.

ஆதலினால் கலியுக மக்களே நீங்களெல்லாம் அரங்கன் மீது பக்தி கொண்டு, உத்தம ஞான குரு ஆறுமுக அரங்க தரிசனம் பெற்றிட, அரங்கன் அருள் பெற்றிட, அரங்கனை நோக்கி வாருங்கள், ஏழாம் படை வீடாம் துறையூர் ஓங்காரக்குடிலிற்கு.

வந்துமே ஆறுமுக அரங்கனை கண்டு தரிசித்து, பணிந்து உபதேசம் ஏற்று ஊக்கம் அடைந்து உயர்தன்மையையும் பெற்று உண்மை ஞானத்தின் விளக்கமும் பெற்று அறிவு தெளிவடைந்து கலியுக இடர்களை வென்று தேசிகன் அரங்கன் காட்டும் உண்மை ஞானவழியை ஏற்று கடைப்பிடித்து உங்களுக்கு பின் வருகின்ற தலைமுறைகளும் அரங்கனை வணங்கி அருள் பெற ஏதுவாய் வகைகள் செய்து சிறப்படையுங்கள்.

எல்லாவிதமான சிறப்புகளையும் தந்தருளுகின்ற மகா ஞானியே உலகினிற் சிறந்த ராஜயோகியே அரங்கமகா தேசிகனே சேவற்கொடியோன் முருகப்பெருமானின் அவதார மகா ஞான தவசியே "**மாதருமத்தினை செய்திட்டால் மரணத்தையும் வெல்லலாம்**" என்கிற பெரும் நிலையை அறம் வழிதனிலே அற்புதங்களை நிகழ்த்தி உலகை ஞானஉலகமாக மக்களை ஞானிகளாக தர்மத்தின் மூலம் எளிமையில் ஆக்குகின்ற ஈடுஇணையற்ற ஞானகுருவே இவ்வுலகினில் உம்மால் கலியுகம் மாறி ஞானயுகமாக உறுதியாக மாறிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் போகமகாரிஷி.

–சுபம்–